ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2295/10 - 2022 අගෝස්තු මස 31 වැනි බදාදා - 2022.08.31
2295/10 ஆம் இலக்கம் - 2022 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி புதன்கிழமை
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

*ச. வ. பீ. 10/2011*

**2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம்**

*2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 3 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் மேலே சொல்லப்பட்ட சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சரினால் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்.*

**ரணில் விக்கிரமசிங்க,**
நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும்
தேசிய கொள்கைகள் அமைச்சர்.

கொழும்பு,
*2022, ஓகத்து 31.*

**ஒழுங்குவிதிகள்**

1. இவ்வொழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் உரிமம் வழங்குதல் ஒழுங்குவிதிகள் என எடுத்துக் காட்டப்படலாம்.

**பாகம் I**
***சீட்டாட்ட தொழிலில் ஈடுபடுவதற்கான உரிமம்***

***உரிமமொன்றுக்கான விண்ணப்பம் அல்லது உரிமமொன்றை மீளப்புதுப்பித்தலுக்கான விண்ணப்பம்***

2. (1) (இதனகத்துப்பின்னர் ''உரிமம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) சீட்டாட்ட இடத்தில் சூதாட்ட தொழிலில் ஈடுபடுவதற்கு உரிமமொன்றுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும், அல்லது உரிமமொன்றை மீளப்புதுப்பித்தலுக்கான விண்ணப்பம்

ஒவ்வொன்றும் இவ்வொழுங்குவிதிகளுக்கான அட்டவணை I இல் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் பொருளளவில் அமைச்சருக்கு விண்ணப்பகாரரினால் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன் அத்தகைய விண்ணப்பத்தில் அடங்கியுள்ள நிகழ்வுகளை நிலைநாட்டுவதற்கு அமைச்சர் அவசியமென கருதுகின்ற அத்தகைய ஆவணங்கள் மற்றும் தகவல்கள் சேர்த்தனுப்பப்படுதலும் வேண்டும்.

(2) ஏலவேயுள்ள தொழிற்படுத்துநரினால் உரிமமொன்றுக்கான ஒவ்வொரு விண்ணப்பமும் இவ்வொழுங்குவிதிகளின் திகதியிலிருந்து அறுபது நாட்கள் முடிவுறுவதற்கு முன்னர் செய்யப்படுதல் வேண்டும்.

(3) உரிமமொன்றின் மீளப்புதுப்பித்தலுக்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் உரிமம் வைத்திருப்பவரினால் வைத்திருக்கப்பட்டுள்ள உரிமத்தின் முடிவுக்கு முன்னர் ஆகக்குறைந்தது ஆறு மாதங்களாகவிருத்தல் வேண்டும்.

(அ) உரிமத்தின் கீழ் சீட்டாட்ட இடத்தில் சூதாட்ட தொழில் விண்ணப்பகாரர் எந்த இடத்தில் அல்லது தொழிற்படுத்துவதற்கு அல்லது வளவில் தொழிற்படுத்துவதற்கு உட்கருதுகின்றாரோ அந்த இடம் அல்லது வளவுகள்; அல்லது

(ஆ) விண்ணப்பத்தில் குறித்துரைக்கப்பட்ட சீட்டாட்ட இடத்தில் சூதாட்ட தொழிலுக்கு பயன்படுத்துவதற்கு அல்லது பயன்படுத்துவதற்கு உட்கருதுகின்றாரோ அந்த வாகனம், உபகரணம் அல்லது பொருள் ஏதேனும் வாகனத்தை, உபகரணத்தை அல்லது வேறு பொருளை.

(5) அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் அத்தகைய புலனாய்வின் அல்லது விசாரணையின் கண்பார்த்தல்களை பற்றி அமைச்சருக்கு அறிக்கையிடுதல் வேண்டும்.

(6) அமைச்சர் பின்வரும் சந்தர்ப்பங்களில் உரிமத்துக்கான விண்ணப்பமொன்றை அல்லது உரிமமொன்று மீளப்புதுப்பிப் பதற்கான விண்ணப்பமொன்றை மறுக்கலாம்:-

(அ) பூரணப்படுத்தப்படாத;
(ஆ) இவ்வொழுங்குவிதிக்கிணங்க ஆக்கப்படாத;
(இ) விண்ணப்பக்காரரினால் மறுக்கப்பட்ட விண்ணப்பம் தொடர்பில் இவ்வொழுங்குவிதியின் உப ஒழுங்குவிதி (4) இன்கீழ் புலனாய்வு அல்லது விசாரணையுள்ளவிடத்து.

**விண்ணப்பத்தை மதிப்பீடு செய்வதில் கவனத்துட் கொள்ளப்பட வேண்டிய கருமங்கள்:**

3. (1) உரிமத்துக்கான விண்ணப்பமொன்று அல்லது உரிமத்தை மீளப்புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்றை மதிப்பீடு செய்யும் போது, அமைச்சர் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரின் அறிக்கை ஏதேனுமிருப்பின் அதனையும் பின்வரும் கருமங்களையும் கவனத்துட் கொள்ளலாம்:-

(அ) உரிமமொன்றுக்கான விண்ணப்பக்காரர் அல்லது மீளப்புதுப்பித்தலுக்கான விண்ணப்பகாரர் சிறந்த மற்றும் நிலையான நிதிப் பின்னணியைக் கொண்டுள்ளாரா அல்லது சீட்டாட்ட இடத்தின் சூதாட்ட தொழிலின் நிதி ஒப்பேற்றுத்தன்மையை உறுதிப்படுத்துவதற்கு போதுமாகவுள்ள நிதி வளங்களைக் கொண்டுள்ளாரா என்பதையும்;

(ஆ) அத்தகைய விண்ணப்பகாரர், அதன் பங்குதாரர்கள், அல்லது அனுசரணையாளர்கள் சீட்டாட்ட இடத்தின் சூதாட்ட தொழிலின் நிதி ஒப்பேற்றத் தன்மையை உறுதிப்படுத்துவதற்கு போதியளவு சொத்துக்களின் அல்லது நிதி வளங்களின் சொத்தாண்மையை அல்லது கட்டுப்பாட்டை உடையவரா என்பதனையும்;

(இ) அத்தகைய சீட்டாட்ட இடத்திலுள்ள சூதாட்ட தொழில் தேசியப் பொருளாதாரத்துக்கு ஏற்றிப்பெறுவதற்கான சாத்தியம் கொண்டுள்ள பங்களிப்பு, இலங்கையின் சுற்றுலாப் பயணிகள் சேரிடம் ஒன்றாக இலங்கையை மேம்படுத்துவதற்கு சீட்டாட்ட விளையாட்டுத் தொழிலின் முக்கியத்துவம் மற்றும் இலங்கைக்கு திரளக்கூடிய சாத்தியமுள்ள வேறு நிதிசார் அல்லது நிதிசாரா நன்மைகள் உள்ளனவா என்பதனையும்.

4. அமைச்சர் உரிமமொன்றுக்கான அல்லது உரிமமொன்றை மீளப்புதுப்பித்தலுக்கான விண்ணப்பமொன்றினை மதிப்பீடு செய்வதற்கு அவருக்கு உதவியளிக்க தேவைப்படக்கூடியவாறான மேலதிக தகவல்கள் அல்லது ஆவணங்களைக் கோரலாம்.

**உரிமக் கட்டணம்**

5. *(1)* ஐந்தாண்டு காலப்பகுதிக்கு அல்லது அதன் ஏதேனும் பகுதிக்கு உரிமமொன்றுக்கான உரிமக் கட்டணம் அல்லது உரிமமொன்றின் மீளப்புதுப்பித்தலுக்கான உரிமக் கட்டணம் ஐந்நூறு மில்லியன் ரூபாவாகவிருத்தல் வேண்டும்.

*(2)* உரிமத்தில் விண்ணப்பிக்கப்பட்ட காலப்பகுதி என்பது இருபது ஆண்டுகளை விஞ்சுதலாகாது என்பதுடன் அது ஐந்து ஆண்டுகளின் பன்மடங்காகவிருக்கும் பட்சத்தில், அத்தகைய முழுக் காலப் பகுதிக்கான இயைபான உரிமக் கட்டணம் முன்கூட்டியே செலுத்தப்படற்பாலதாதல் வேண்டும்.

*(3)* உரிமமானது உரிமமொன்றுக்கு அல்லது உரிமமொன்றுக்கான மீளப்புதுப்பித்தலுக்காக விண்ணப்பகாரரினால் இயைபான உரிமக் கட்டணம் செய்யப்பட்டு அமைச்சருக்கு உடனடியாக சமர்ப்பிக்கப்பட்டதன் எண்பிப்பு இருந்தால் மட்டுமே வழங்கப்படுதல் வேண்டும்.

**உரிமத்தை வழங்குதல்**

6. *(1)* உரிமமொன்றுக்கான அல்லது உரிமமொன்றை மீளப்புதுப்பித்தலுக்கான ஏதேனும் விண்ணப்பத்தினை மதிப்பீடு செய்வதன்மேல், அமைச்சர் ஒழுங்குவிதி 3 இல் தரப்பட்டுள்ள கருமங்களின்மீது திருப்திப்படுவதன்மீது மற்றும் ஒழுங்குவிதி 5 இல் குறித்துரைக்கப்பட்ட ஏற்புடையற்பாலனவான உரிமக்கட்டணத்தை விண்ணப்பக்காரர் செலுத்தியுள்ளதன் மீதும் -

(i) உரிமத்தினால் அதிகாரமளிக்கப்பட்ட இடத்தில் அல்லது வளவுகளில் சீட்டாட்ட இடத்தில் சூதாட்டத் தொழிலில் ஈடுபடுவதற்கு விண்ணப்பக்காரருக்கு அதிகாரமளிக்கின்ற உரிமமொன்றை விண்ணப்பக்காரருக்கு வழங்கலாம்;

(ii) உரிமமொன்றின் நிபந்தனைகளை மாற்றியமைத்து அல்லது மாற்றியமைக்காமல் உரிமமொன்றை மீளப்புதுப்பித்தல்; அல்லது

(iii) விடயத்துக்கேற்ப, உரிமத்தை அளிப்பதற்கு அல்லது மீளப்புதுப்பிப்பதற்கு மறுக்கலாம்.

*(2)* உரிமம் ஒவ்வொன்றும் அமைச்சரால் முன்னரே இரத்துச் செய்யப்பட்டாலொழிய, அல்லது உரிமம் வைத்திருப்பவரால் ஒப்படைக்கப்பட்டாலொழிய ஆகக்குறைந்தது ஐந்து ஆண்டு காலப்பகுதிக்கு வலிதானதாக இருத்தல் வேண்டும்.

**உரிமமொன்றை இரத்துச் செய்தல்**

7. ஏதேனும் உரிமம் பின்வருமாறு அமைச்சரால் இரத்துச் செய்யப்படலாம்:-

*(அ)* அத்தகைய உரிமத்திலுள்ள வெளிப்படையான ஏற்பாட்டின் விளைவாக முடிவுறுத்தலுக்கு ஏற்பாடு செய்தல்;

*(ஆ)* ஒழுங்குவிதி 8 இன் கீழான விசாரணையின் பின்னர் எடுக்கப்பட்ட நடவடிக்கையை பின்பற்றுதல்.

**விசாரணைக்குப் பின்னர் உரிமத்தை இரத்துச் செய்தல்**

8. அமைச்சர், எவரேனும் ஆளிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட ஏதேனும் தகவலின்மீது அல்லது ஏதேனும் முறைப்பாடொன்றின் மீது பின்வருவனவற்றை தீர்மானிப்பதற்கு உரிமம் வைத்திருப்பவருக்கு எதிராக அமைச்சரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர் ஒருவரினால் நடாத்தப்படவேண்டிய விசாரணையொன்றை பணிக்கலாம்:-

*(அ)* உரிமம் வைத்திருப்பவர், உரிமம் வைத்திருப்பவரின் எவரேனும் முகவரின் அல்லது உரிமம் வைத்திருப்பவரின் அறிவுறுத்தல்களின்மீது செயலாற்றுகின்ற உரிமம் வைத்திருப்பவரின் ஊழியர் அல்லது உரிமம் வைத்திருப்பவரின் எவரேனும் முகவர் 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீட்டுச் சட்டம் உள்ளடங்கலாக எவையேனும் ஏற்புடையற்பாலதான சட்டத்தின் ஏதேனும் ஏற்பாட்டை அல்லது இவ் ஒழுங்குவிதிகளினை மீறியுள்ளாரா;

*(ஆ)* சட்டம் அல்லது இவ் ஒழுங்குவிதிகளின் நியதிகளின் பிரகாரம் தேவைப்படும் போது, உரிமம் வைத்திருப்பவர் அமைச்சருக்கு போலியான தகவலை அளித்துள்ளாரா; அல்லது

(இ) ஏதேனும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உரிமத்தின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் உரிமம் வைத்திருப்பவரால் மீறப்பட்டுள்ளனவா.

9. உரிமம் வைத்திருப்பவருக்கு, தவறுகைகள் அல்லது மீறுகைகள் எவையும் இருந்திருக்கவில்லை என நிலைநாட்டுவதற்கு அறிவித்தல் திகதியிலிருந்து ஆகக்குறைந்தது இருபது வேலைநாட்களினுள் காரணம் ஏதேனும் இருப்பின் அதனை எழுத்தில் காட்டும் படியும் சான்று ஏதும் இருப்பின், அதனை வழங்கும் படியும் அத்தகைய உரிமம் வைத்திருப்பவரை கோருகின்றதும் ஒழுங்குவிதி 8 இன்கீழான அத்தகைய விசாரணையில் இருந்து இருபது வேலைநாட்களுக்கு குறையாததுமான அத்தகைய எழுத்திலான அறிவித்தல் கொடுக்கப்படுதலும் வேண்டும்.

10. உரிமம் வைத்திருப்பவரால் எடுக்கப்பட வேண்டிய இவ் ஒழுங்குவிதிகளினால் தேவைப்படுத்தப்பட்டவாறான அத்தகைய விசாரணையில், அத்தகைய உரிமம் வைத்திருப்பவரை பிரதிநிதித்துவப்படுத்தி அத்தகைய விசாரணையுடன் சம்பந்தப்பட்ட அத்தகைய அனைத்து வழிமுறைகளையும் எடுத்தல் இணக்கப்பாட்டு அலுவலருக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

11. அமைச்சர், அவரால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரினால் ஒழுங்குவிதி 8 இன்கீழ் தொடங்கப்பட்ட விசாரணையொன்றை பின்பற்றி அமைச்சருக்கு சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கையொன்றை கவனத்துட்கொண்டதன் பின்னர், திருப்திப்படுகின்றவிடத்து ஒழுங்குவிதி 8 இல் குறிப்பீடு செய்யப்பட்ட ஏதேனும் ஒன்று அல்லத அதற்கு மேற்பட்ட செயல்கள் இடம்பெற்றுள்ள போது, அமைச்சர் உரிமத்தை இரத்துச் செய்யலாம் அல்லது உரிமத்தை இரத்துச் செய்தலுக்குப் பதிலாக பின்வருவதனை செய்யலாம்:-

(அ) இணக்கப்பாட்டின்மையினை சரிசெய்வதற்கு உரிமம் வைத்திருப்பவருக்கு கட்டளையிடுதல்;

(ஆ) உரிமம் வைத்திருப்பவரால் எந்த ஏற்புடமையாகும் சட்டங்களினால் சீட்டாட்ட இடத்தில் சூதாட்டத் தொழில் தொழிற்படுத்தப்படுகின்றதோ அந்த ஏற்புடமையாகும் சட்டங்களுடன் இணங்கியொழுகுகின்ற உரிமத்திற்கான மேலதிக நியதிகள் மற்றும் நிபந்தனைகளை அறிமுகப்படுத்துதல்.

12. ஒழுங்குவிதி 11 இன் கீழ் அமைச்சரால் எடுக்கப்பட்ட முடிபு, உரிமம் வைத்திருப்பவருக்கு எழுத்துமூலமாக அறிவிக்கப்டுதல் வேண்டும்.

**உரிமத்தை ஒப்படைத்தல்**

13. எவரேனும் உரிமம் வைத்திருப்பவர் உரிமம் வைத்திருப்பவரினால் செலுத்தற்படற்பாலதான வரிகள், அறவீடுகள், தீர்வைகள், அல்லது கட்டணங்கள் உட்பட அரசாங்கத்துக்கு எல்லா வருமதிகளையும் செலுத்துவதற்கு உரிமம் வைத்திருப்பவரின் பாலான கடப்பாட்டிற்கு பங்கமின்றி, உரிமத்தின் மூலப்பிரதியுடன் அதற்கான எவையேனும் திருத்தங்களை சேர்த்தும் அமைச்சருக்கு எழுத்தில் அறிவித்தல் கொடுப்பதன் மூலம் அதன் உரிமத்தை ஒப்படைக்கலாம்.

14. அத்தகைய ஒப்படைத்தல், அமைச்சரால் எழுத்துமூலம் அங்கீகரிக்கப்பட்டதன் மேல் மட்டுமே பயன்கொடுத்தல் வேண்டுமென்பதுடன் அங்கீகாரமானது உரிமம் வைத்திருப்பவரால் செலுத்தப்படற்பாலதான வரிகள், அறவீடுகள் தீர்வைகள் அல்லது கட்டணங்கள் போன்றன உள்ளடங்கலாக அரசாங்கத்திற்கான எல்லா வருமதிகளையும் பற்றி போதுமான மற்றும் ஏற்றுக்கொள்ளக்கூடிய எண்பிப்பை கொடுத்துதவுவதன் மேல் மட்டுமே அளிக்கப்படுதல் வேண்டும்.

## பாகம் II

### உரிமம் வைத்திருப்பவர்களின் கடப்பாடுகள்

15. ஒவ்வொரு உரிமம் வைத்திருப்பவரும் சீட்டாட்டம் தொடர்பாக இணக்கப்பாட்டு அலுவலரொருவராக செயலாற்றுவதற்கு பொருத்தமான மற்றும் முறையான ஆளை நியமித்தல் வேண்டும்.

16. இணக்கப்பாட்டு அலுவலர் அத்தகைய ஏற்புடையற்பாலதான சட்டங்கள் மற்றும் உரிமம் வழங்கப்பட்ட நியதிகள் மற்றும் நிபந்தனைகளுக்கமைய சீட்டாட்ட இடத்தில் சூதாட்ட தொழிலின் செயற்பாடுகள் இணங்கியொழுகுகின்றமையை உறுதிசெய்தல் வேண்டும்.

17. உரிமம் வைத்திருப்பவரொருவரினால், உரிமம் வைத்திருப்பவரின் எவரேனும் முகவரினால், அல்லது அத்தகைய உரிமம் வைத்திருப்பவரின் அறிவுறுத்தல்களின் மீது செயலாற்றுகின்ற உரிமம் வைத்திருப்பவரின் எவரேனும் ஊழியரினால் அல்லது அத்தகைய உரிமம் வைத்திருப்பவரின் முகவரினால் ஏதேனும் ஏற்புடையற்பாலதான சட்டத்தின் ஏற்பாடுகளின் அல்லது உரிமத்தில்

அடங்கியுள்ள நியதி மற்றும் நிபந்தனைகளின் ஏதேனும் மீறுகை புரியப்படும் பட்சத்தில், அமைச்சரினால் கோரப்படும் போது அத்தகைய மீறுகை அல்லது முரண்பாடு தொடர்பாக அமைச்சருக்கு அல்லது அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது அமைச்சருக்கு உதவுவதற்கு என அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு அல்லது அத்தகைய வேறு மீறுகை அல்லது முரண்பாட்டின் ஏதேனும் புலனாய்வு அல்லது விசாரணை அல்லது மதிப்பீடு தொடர்பில் அமைச்சரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் அலுவலருக்கு இயைபான எல்லா தகவல்களையும் ஆவணங்களையும் அத்தகைய இணக்கப்பாட்டு அலுவலர் வழங்குவதனை உறுதிப்படுத்துவது உரிமம் வைத்திருப்பவரின் கடமையாதல் வேண்டும்.

**சீட்டாட்ட இடத்தினுள் நடத்தை**

18. உரிமம் வைத்திருப்பவர் அதன் ஊழியர்கள், போசகர்கள் அல்லது சீட்டாட்ட இடத்திலுள்ள வேறு ஆட்களினால் பின்வரும் செயல்கள் புரியப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதற்கு தோதான அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்தல் வேண்டும்:-

(அ) விபச்சார நோக்கத்திற்காக அல்லது வேறு ஏதேனும் சட்டவிரோத நோக்கத்திற்காக பரிந்துகேட்டல்;

(ஆ) உரிமமாற்ற பண வழங்குகை அல்லது தொடர்புபட்ட செயற்பாடுகள்;

(இ) குடிபோதையில், ஒழுங்கீனமான அல்லது கலகத்தனமான நடத்தை;

(ஈ) சட்டவிரோத பந்தயம் அல்லது சூதாட்ட செயற்பாடுகள்; அத்துடன்

(உ) ஏதேனும் ஏற்புடையற்பாலதான சட்டத்திற்கு முரணாக ஏதேனும் தவறு அல்லது சட்டவிரோத செயல்.

**பராயமடையாதவர்கள் சீட்டாட்ட இடத்தில் நுழைதல் அல்லது இருத்தலாகாது.**

19. பராயமடையாதவரொருவர் ஏதேனும் சீட்டாட்ட இடத்தில் நுழைவது அல்லது தங்குவது அல்லது ஏதேனும் சூதாட்டத்தில் பங்கேற்பது கடுமையாக தடை செய்யபட்டிருக்கப்படுதல் வேண்டும்.

20. பராயமடையாத ஒருவர் சீட்டாட்ட இடத்தில் இருப்பாராயின், உரிமம் வைத்திருப்பவர் உடனடியாக அப்பராயமடையதவரை அச்சீட்டாட்ட இடத்திலிருந்து அகற்றுவதற்கு நியாயமான நடவடிக்கைகளை எடுத்தல் வேண்டும்.

21. உரிமம் வைத்திருப்பவர் சீட்டாட்ட இடத்தினுள் நுழைவதற்கு நாடுகின்ற அல்லது சீட்டாட்ட இடத்தினுள் உள்ளவரான ஆளொருவரின் வயதினை அல்லது அடையாளச் சான்றுகளைக் காட்டுதற்கு தேவைப்படுத்துவதற்கான உரிமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

22. உரிமம் வைத்திருப்பவர் இருபத்தியொரு வயதுக்கு குறைந்த ஆட்களை சீட்டாட்ட இடத்திலிருந்து விலக்குகின்ற அறிவித்தலொன்றினை சீட்டாட்ட இடத்தினுள் காட்சிப்படுத்துதல் வேண்டும்.

**பேரேடுகள், கணக்குகள் மற்றும் பதிவேடுகள்**

23. உரிமம் வைத்திருப்பவர், இலங்கையில் உரிமம் அளிக்கப்பட்ட வர்த்தக வங்கியில், அத்தகைய சீட்டாட்ட இடத்தின் அனைத்து தொழிற்பாடுகள் தொடர்பில் அனைத்து வங்கித் தொழில் கொடுக்கல் வாங்கல்களுக்காக தனி வேறான கணக்குகளை வைத்து பராமரித்தல் வேண்டும்.

24. உரிமம் வைத்திருப்பவர், பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் மற்றும் கொள்கைகளுக்கிணங்க, கணக்கீட்டு பதிவுகளைப் பேணுதல் வேண்டுமென்பதுடன், உண்மையான மற்றும் நியாயமான நிதிநிலைமை கூற்றுக்கள் மற்றும் கணக்குகளைத் தயாரிப்பதற்கும், வசதியான மற்றும் துல்லியமான கணக்காய்வினை வசதிப்படுத்தவதற்கும் உதவும் முறையிலும் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்படுதலும் வேண்டும்.

25. உரிமம் வைத்திருப்பவர், அதன் நிதியாண்டு முடிந்தபின்னர், ஆறு மாதங்களுக்குள் நிதிக் கூற்றுக்கள் மற்றும் கணக்குகளை பின்வருவன உள்ளடங்கலாக தயாரித்தல் வேண்டும் : -

(அ) ஏற்புடையவிடத்து, நிதியாண்டிற்கான வர்த்தகக் கணக்கு:

(ஆ) நிதியாண்டிற்கான இலாபம் மற்றும் நட்ட கூற்று அல்லது விரிவான வருமான கூற்று;

(இ) சீட்டாட்டம் இடம் பெறும் இடம் தொடர்பான உரிமம் வைத்திருப்பவரின் நிதி தொழிற்பாடுகளின் உண்மையான, நியாயமான மற்றும் துல்லியமான பிரதிநிதித்துவத்தை ஏற்பாடு செய்கின்ற நிதியாண்டின் முடிவில் உள்ளவாறான அதன் நிதிநிலைமைக்கூற்று; அத்துடன்

(ஈ) அதன் மொத்த சூதாட்ட அரசிறை மற்றும் நிகர சூதாட்ட அரசிறை உள்ளடங்கலான கூற்று.

26. அமைச்சர், ஒழுங்குவிதி 23 இல் குறிப்பீடுசெய்யப்பட்ட வங்கி முகாமையாளர் அல்லது வேறு முதன்மை அலுவலரை எவரேனும் உரிமம் வைத்திருப்பவரின் கணக்குகள் தொடர்பில் கணக்குக்கூற்றொன்றை அல்லது அத்தகைய வேறு விபரங்களை அமைச்சருக்கு அல்லது அமைச்சரால் பணிக்கப்பட்டதான இலங்கையில் உள்ள தகுதிவாய்ந்த வேறேதேனும் அதிகாரசபைக்கு எழுத்து மூலம் தேவைப்படுத்தலாம்.

27. இவ்வொழுங்குவிதிகளின் கீழ் உரிமம் வைத்திருப்பவரால் வைத்திருக்கப்படுவதற்கு தேவைப்படுத்தப்பட்ட அனைத்து பேரேடுகள், கணக்குகள் மற்றும் பதிவேடுகள் வேறுவகையில் குறித்துரைக்கப்பட்டாலொழிய, ஆகக்குறைந்தது ஆறு ஆண்டு காலப்பகுதிக்கு வைத்திருக்கப்படுதல் வேண்டுமென்பதுடன் அமைச்சரால் கோரப்பட்டிருப்பின், வழங்கப்படுதலும் வேண்டும்.

28. இவ்வொழுங்குவிதிகளில் குறிப்பீடுசெய்யப்பட்ட பேரேடுகள், கணக்குகள் மற்றும் பதிவேடுகள் எல்லா நேரங்களிலும்;

(அ) பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்கப்படுதல் வேண்டும்; அத்துடன்
(ஆ) உடனடியாகவும் எளிதாகவும் அணுகக்கூடியதாக இருத்தலும் வேண்டும்.

**கணக்காய்வுகள்**

29. உரிமம் வைத்திருப்பவர் அவரின் அனைத்து ஆண்டிறுதி நிதிசார் கூற்றுக்கள் இலங்கையில் தொழிற்படுகின்ற கணக்காளர் குழுமமொன்றினால் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு நியமங்களுக்கிணங்க கணக்காய்வு செய்யப்பட்டவை என்பதை உறுதி செய்தல் வேண்டும்.

30. உரிமம் வைத்திருப்பவரொருவர் ஒவ்வொரு நிதியாண்டின் கடைசி நாளின் ஆறு மாதங்களினுள் அல்லது அமைச்சரால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய மேலதிக காலப்பகுதியினுள் அதன் கணக்காய்வு செய்யப்பட்ட ஆண்டிறுதி நிதிநிசார் கூற்றுக்களின் பிரதிகளை அமைச்சருக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

31. அமைச்சர், நிதிசார் கூற்றுக்கள் மற்றும் கணக்காய்வாளரால் நிறைவேற்றப்படும் சேவைகள் தொடர்பாக ஒன்றில் உரிமம் வைத்திருப்பவரிடம் அல்லது அதன் கணக்காய்வாளரிடமிந்து மேலதிகத் தகவல்கள் அல்லது ஆவணங்களைக் கோரலாம்.

**சூதாட்ட பதிவேடுகள்**

32. உரிமம் வைத்திருப்பவர் பின்வருவனவற்றை வைத்திருத்தல் வேண்டும்:

(அ) அனைத்து சூதாட்ட கொடுக்கல்வாங்கல்களின் துல்லியமான, முழுமையான, தெளிவான நிரந்தர பதிவேடுகள்; மற்றும்

(ஆ) விரிவான துணைப் பதிவேடுகள், அரசிறை, செலவுகள், சொத்துக்கள், பொறுப்புகள் மற்றும் ஒப்புரவு ஆகியவற்றை அடையாளம் கண்டு பின்வருவன உட்பட பேணப்பட்ட கணக்கீட்டு பதிவேடுகள்,:

(i) அமைச்சரினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கணக்கீட்டு காலப்பகுதியின் பிரகாரம், ஒவ்வொரு மேசை விளையாட்டிற்காகவும் கைவிடுகை, வெற்றி மற்றும் மேசை மூலமாக வெற்றிக்கும் கைவிடுகைக்குமான நூற்றுவீதத்தை பிரதிபலிப்பதற்கும் ஒவ்வொரு வகையினதான மேசை விளையாட்டிற்கான கைவிடுகைக்கான வெற்றி மற்றும் வெற்றியிலிருந்து கைவிடுவதற்கான நூற்று வீதத்தையும் பிரதிபலிப்பதற்குமான தனிப்பட்ட விளையாட்டுப் பதிவேடுகள்;

(ii) ஏனைய எல்லா சூதாட்டங்கள் தொடர்பில் ஒத்த தகவலைப் பிரதிபலிக்கின்ற தனிப்பட்ட சூதாட்டப் பதிவேடுகள்;

(iii) ஒவ்வொரு இயந்திரத்திற்கும் மொத்தவரவு மற்றும் செலுத்துதல்களை பிரதிபலிக்கின்றதான துளை இயந்திரத்தின் பகுப்பாய்வு அறிக்கைகள் மற்றும் தினசரி, மாதாந்த, காலாண்டு, ஆண்டிறுதி மற்றும் பன்னிரெண்டு மாதங்கள் சுழற்சி மீது உண்மையான நூற்றுவீதங்களை தத்துவார்த்த பிடித்தல் நூற்றுவீதங்களுடன் ஒப்பிடுகின்றமை;

(iv) உள்ளகக் கட்டுப்பாட்டு நியமங்களுக்கேற்ப உரிமம் வைத்திருப்பவரால் பேணப்பட வேண்டிய பதிவேடுகள்; அத்துடன்

(v) அமைச்சர், குறிப்பாகப் பேணப்படுவதற்கு தேவைப்படுத்துகின்ற வேறு எவையேனும் பதிவுகள்.

**ஏனைய பதிவேடுகள்**

33. உரிமம் வைத்திருப்பவர், அது ஒரு கம்பெனியொன்றாக இருக்குமிடத்து, பின்வருவனவற்றை வைத்திருத்தல் வேண்டும்.

(அ) அதற்கான எவையேனும் திருத்தங்கள் உட்பட, அதன் அரசியலமைப்பு ஆவணப்படுத்தலின் பிரதி;

(ஆ) நியமனத் திகதி, அந்தஸ்த்து மற்றும் ஏற்புடைமையாகுமிடத்து ஒவ்வொருவரின் தொழில் முடிவுறுத்தப்பட்ட திகதியையும் பிரதிபலிக்கின்றதான அனைத்து ஊழியர்களின் நிரந்தரப் பதிவேடு;

(இ) அனைத்து பங்குதாரர் கூட்டங்களின் நிகழ்ச்சி கூட்டக்குறிப்புகள்;

(ஈ) பணிப்பாளர் சபையின் அனைத்து கூட்டங்களின் கூட்ட நிகழ்ச்சிக்குறிப்புகள்; அத்துடன்

(உ) அமைச்சர், (பட்டியலிடப்படாத ஒரு கம்பெனி எனும் விடயத்தில்) அனைத்து பங்குதாரர்களின் பதிவு, ஒவ்வொரு பங்குதாரரின் பெயர், முகவரி, வைத்திருக்கும் பங்குகளின் எண்ணிக்கை மற்றும் பங்குகள் கொள்ளப்பட்டதான திகதி ஆகியவற்றைப் பட்டியலிடுதல் என்பவற்றை தேவைப்படுத்தினாராயின்,

**தொழில்தருநர்கள் மற்றும் அவர்களுடைய ஊழியர்கள்**

34. ஒவ்வொரு உரிமம் வைத்திருப்பவரும் சீட்டாட்ட இடமொன்றில் தொழிற்படுத்துவதற்காக இவ்வொழுங்குவிதிகளில் குறித்துரைக்கப்பட்டதான முக்கிய ஊழியர்களை தொழிலுக்கமர்த்துதல் வேண்டும்.

35. ஒரு முக்கிய ஊழியர் என்பது -

(அ) முகாமைத்துவ பதவியை வகிக்கின்றவரும் மற்றும் சீட்டாட்ட இடத்தின் தொழிற்பாடுகளுடன் சம்பந்தப்பட்ட தற்றுணிபை பிரயோகிப்பதில் ஈடுபட்டு முடிபுகளை ஆக்குவதற்கு அதிகாரமளிக்கின்றவருமான ஆள்; அல்லது

(ஆ) சீட்டாட்ட இடத்தின் பின்வரும் எவையேனும் செயற்பாடுகள் தொடர்பில் ஏதேனும் தகைமையில் தொழிலுக்கமர்த்தப்படுகின்றவருமான ஆள் எனப்பொருள்படும்:

(i) சூதாட்டத்தை நடத்துதல்;
(ii) சீட்டாட்ட வளாகத்தில் பணம் அல்லது சில்லுகளின் இயக்கம்;
(iii) சீட்டாட்ட இடத்தின் போசகர்களுக்கு பணம் அல்லது சில்லுகள் பரிமாற்றம்;
(iv) சீட்டாட்ட வளாகத்தில் பணம் அல்லது சில்லுகளை எண்ணுதல்;
(v) சீட்டாட்டத்தின் பாதுகாப்பு மற்றும் கண்காணிப்பு;
(vi) சூதாட்ட இயந்திரங்களின் தொழிற்பாடு, பராமரிப்பு, நிருமாணம் அல்லது திருத்துதல்;
(vii) எவையேனும் மேலேயுள்ள செயற்பாடுகளின் மேற்பார்வை;
(viii) உரிமம் வைத்திருப்பவருக்கு எழுத்தில் வழங்கப்பட்ட அறிவித்தலினால் இவ்வொழுங்குவிதிகளின் நோக்கங்களுக்காக, அமைச்சரால் குறித்துரைக்கப்பட்ட சீட்டாட்ட இடத்தின் தொழிற்பாடுகள் தொடர்பில் வேறு ஏதேனும் செயற்பாடுகள்.

36. ஒவ்வொரு உரிமம் வைத்திருப்பவரும், முக்கியமான ஊழியர்களாகத் தொழிலுக்கமர்த்தப்பட்ட ஆட்கள் நியாயமான தகுதியுடையவர்கள் என்பதுடன் அத்தகைய பதவியை வகிப்பதற்கு தகுதியானவர்கள் என்பதையும் அத்தகைய அலுவலகத்துடன் இணைக்கப்பட்டுள்ள பணிகள் மற்றும் கடமைகளை நிறைவேற்றுதல் மற்றும் போதுமான பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளது என்பதனையும் உறுதி செய்தல் வேண்டும்.

## பாகம் III

### வரைவிலக்கணங்கள்

37. இவ் ஒழுங்குவிதிகளில் -

*"சட்டம்" என்பது 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்டத் தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டம் என பொருள்படும்;*

*"விண்ணப்பக்காரர்" என்பது கம்பெனியொன்று எனப் பொருள்படுவதுடன் ஏலவேயுள்ள தொழிற்படுத்துநரையும் உள்ளடக்குகின்றது.*

*"அதிகாரமளிக்கப்பட்ட அலுவலர்" என்பது 2017 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, உண்ணாட்டரசிறைச் சட்டத்தின்கீழ் நியமிக்கப்பட்ட உண்ணாட்டு அரசிறை ஆணையாளர் தலைமையதிபதி எனப் பொருள்படும்;*

*"இணக்கப்பாட்டு அலுவலர்" என்பது இணக்கப்பாட்டு அலுவலராக ஒழுங்குவிதி 15 இன் கீழ் நியமிக்கப்பட்டவரான தனியாளொருவர் எனப் பொருள்படும்;*

*"சீட்டாட்டம்" என்பத சட்டத்தின் பிரிவு 5 இன்கீழ் அச் சொல்லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்;*

*"சீட்டாட்ட இடத்தில் சூதாட்ட தொழில்" என்பது சீட்டாட்டமொன்றின் தொழில் என்று பொருள்படும்;*

*"கம்பெனி" என்பது 2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க, கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட கம்பனியொன்று எனப் பொருள்படும்;*

*"சில்லுகள்" என்பது சீட்டாட்ட இடமொன்றில் சூதாட்டம் மற்றும் கொடுக்கல்வாங்களுக்குப் பிரத்தியேகமாகப் பயன்படுத்துவதற்கும் அதன் முகத்தில் விதிக்கப்பட்ட பணப் பெறுமதிக்கு மீட்டெடுக்கக்கூடியதும் அதன் உரிமமளிக்கப்பட்ட வளாகத்தில் பிரத்தியேக பயன்பாட்டிற்காக போசகர்களுக்கு உரிமம் வைத்திருப்பவரால் வழங்கப்பட்ட அல்லது விற்பனை செய்யப்பட்ட உற்பத்தி பொருள் எனப் பொருள்படும்;*

*"விற்பனைச் செலவுகள்" என்பது அனைத்து சந்தைப்படுத்தல், விளம்பரப்படுத்துதல் மற்றும் விளம்பரச் செலவுகள்; போசகர்களுக்கான விமான டிக்கெட்டுகள், ஹோட்டல், தங்குமிடம், உணவு மற்றும் பானங்களின் செலவு, உரிமம் வைத்திருப்பவரால் ஏற்கப்படுகிறது; உரிமம் வைத்திருப்பவரால் செலுத்தப்படற்பாலதான ஏதேனும் தரகு; பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க ஐயக்கடன்கள், கடன்கள் மற்றும் சந்தேகத்திற்குரிய கணக்குகள்; மற்றும் போசகர்களுக்கான ஏனைய குறைநிரப்பு விடயங்களின் செலவு உரிமம் வைத்திருப்பவரால் ஏற்கப்படுகிறது;*

*"ஏலவேயுள்ள தொழிற்படுத்துநர்" என்பது திருத்தப்பட்டவாறான 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீட்டுச் சட்டத்தின்படி, சூதாட்டத் தொழில் ஒன்றை மேற்கொள்வதற்காக உண்ணாட்டரசிறைத் திணைக்களத்தில் பதிவு செய்து இலங்கையில் சீட்டாட்ட சூதாட்டத் தொழிலில் ஈடுபடுவதற்கான ஒழுங்குவிதிகளின் கீழ் உரிமம் பெற விண்ணப்பிக்கத் தகுதியுடைய, இலங்கையில் சீட்டாட்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள ஏலவேயுள்ள தொழிற்படுத்துநர் என்று பொருள்படும்.*

*"சூதாட்டம்" என்பது 1988 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, பந்தயம் மற்றும் சூதாட்ட அறவீட்டுச் சட்டத்தின் கீழான சொல்லமைப்புக்கு குறித்தளிக்கப்பட்ட அதே பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.*

*"சூதாட்ட இயந்திரம்" என்பது வாய்ப்பு மற்றும் திறமைசார் சூதாட்டங்களை விளையாடுவதற்கு அல்லது சீட்டாட்ட இடத்தில் பணத்தை வெல்வதற்கான வாய்ப்புக்கான சூதாட்டங்களுக்கு தனியாட்களினால் பயன்படுத்தப்படும் இயந்திரம் ஒன்று எனப் பொருள்படும்;*

*"பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் நியமங்கள்" என்பது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்கள் சட்டத்தின் கீழ் கணக்கீட்டு நியமங்கள் குழுவினால் தரப்பட்டுள்ள இலங்கை கணக்கீட்டு நியமங்கள் எனப் பொருள்படும்;*

''பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்கள் என்பது 1995 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமங்களுடன் இணங்கியொழுகுவதில் உள்ளூர் நிபந்தனைகளுக்கு இணங்க தோதான திரிபுபடுத்தல்களுடன் ஏலவேயுள்ள கணக்காளர் சம்மேளனத்தின் (IFAC) ஏலவேயுள்ள கணக்காய்வு மற்றும் உத்தரவாத நியமங்கள் சபையால் (IAASB) வெளியிடப்பட்ட கணக்காய்வு மீதான ஏலவேயுள்ள நியமங்களின் (ISA) அடிப்படையின் மீதான இலங்கை கணக்கீட்டு நியமங்கள் எனப் பொருள்படும்;

''நிகர சூதாட்ட அரசிறை'' என்பது போசகர்கள் பந்தயம் கட்டப்பட்ட பணத்தின் தொகைகளுக்கும் மொத்த வெற்றிகளின் கழிப்பனவுக்கும் இடையிலான வித்தியாசம் என்று பொருள்படும்;

''உரிமம் வைத்திருப்பவர்'' என்பது, ஒழுங்குவிதி 6 இன் கீழ் வழங்கப்பட்ட உரிமமொன்றை வைத்திருப்பவர் எனப் பொருள்படும்;

''பராயமடையாதவர்'' என்பது இருபத்தொரு வயதுக்குட்பட்ட எவரேனும் இயற்கையான ஆள் எனப் பொருட்படும்;

''தேறிய சூதாட்ட அரசிறை'' என்பது விற்பனைச் செலவைக் குறைக்கின்ற சூதாட்ட அரசிறை என்று பொருள்படும்;

''வெற்றிகள்'' என்பது பண அல்லது பணமல்லாத பரிசை உள்ளடக்குகிறது.

## அட்டவணை I

(ஒழுங்குவிதிகள் 2)

### சூதாட்ட இடத்துக்கான உரிமத்துக்கான விண்ணப்பப்படிவம்

1. விண்ணப்பமானது : ☐ ஏலவேயுள்ள சீட்டாட்ட இடத்தொழிற்பாட்டுக்கு
☐ புதிய சீட்டாட்ட இடத்தொழிற்பாட்டுக்கு

2. விண்ணப்பகாரர் : ..........................................................

(சீட்டாட்ட இடத்துக்கான விண்ணப்பகாரர், சொந்தக்காரர் அல்லது சீட்டாட்ட இடத்தில் சொந்தக் காரராகவுள்ள சட்ட ஆள்)

3. விண்ணப்பகாரரின் முகவரி : ..........................................................

4. வரிசெலுத்துபவரின் அடையாள எண் (TIN) (உண்ணாட்டரசிறை திணைக்களத்தினால் வழங்கப்பட்டது) : ..........................................................

5. கம்பெனி/வியாபார பதிவு இல. : ..........................................................

6. சீட்டாட்ட இடத்தின் பெயர் : ..........................................................

7. சீட்டாட்ட இடத்தின் இடம்/முகவரி : ..........................................................

8. சீட்டாட்ட இடம் அமைந்துள்ள நிருவாக மாவட்டம் : ..........................................................

9. சீட்டாட்ட இடம் சீட்டாட்டங்களின் சங்கிலித் தொடரிற்கு சொந்தமானதா : ☐ ஆம்
☐ இல்லை

10. ஆம் எனில்,
(அ) சங்கிலித் தொடரின் பெயர் : ..........................................................
(ஆ) சங்கிலித் தொடரிலுள்ள சீட்டாட்ட இடங்களின் எண்ணிக்கை : ..........................................................

(இ) செயற்பாட்டிலுள்ள நியாயாதிக்கங்கள் : ..............................

11. சீட்டாட்ட இடம் திறக்கும் நேரம் : ..............................
திறக்கும் நேரம் ..............................
மூடும் நேரம் ..............................

12. இணக்க அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளமை : ☐ ஆம்
☐ இல்லை

13. ஆம் எனில், இணக்க அலுவலரின் பெயர் : ..............................

14. இணக்க அலுவலரின் தொடர்பு பற்றிய விபரங்கள் : ..............................

15. சீட்டாட்ட இடத்தின் முகாமையாளர் : ..............................
(சீட்டாட்ட இடத்தின் முகாமையாளர் பற்றிய தகவல்களை வழங்கவும்)

(அ) பெயர் ..............................
(ஆ) முகவரி ..............................
(இ) தே. அ. இ/கடவுச்சீட்டு இலக்கம் ..............................
(ஈ) வழங்கிய இடம் மற்றும் திகதி ..............................
(உ) மின்னஞ்சல் ..............................
(ஊ) தொலைபேசி இலக்கம் (கள்) ..............................

16. கிடைக்கக்கூடிய விளையாட்டுக்கள்
(தயவுசெய்து சீட்டாட்ட இடத்தில் வழங்கப்படவுள்ள விளையாட்டுக்கள் பற்றிய தகவல்களை வழங்கவும், இணைப்புக்களாகவும் இருக்கலாம்)

விளையாட்டு மேசைகள்

| விளையாட்டு மேசைகளின் வகை | விளையாட்டு மேசைகளின் எண்ணிக்கை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

ஸ்லொட் இயந்திரங்கள்

| ஸ்லொட் இயந்திரத்தின் வகை | ஸ்லொட் இயந்திரங்களின் எண்ணிக்கை |
|---|---|
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |
| | |

ஏனைய விளையாட்டுக்கள் (1) ........................................................................
(2) ........................................................................
(3) ........................................................................

17. கையொப்பம் ........................................................................

விண்ணப்பமானது கூட்டிணைப்பின் உறுப்புரைகளுக்கிணங்க கையொப்பமிடுவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட இயற்கை ஆளினால் அல்லது ஆட்களினால் கையொப்பமிடுதல் கட்டாயமானதாகும். இவ்விண்ணப்பத்தில் கையொப்பமிடுதலின்மூலம் கையொப்பமானது பின்வருவதனை உறுதிப்படுத்துகின்றது.

1. இவ்விண்ணப்பத்தில் சுட்டிக்காட்டப்பட்ட இடத்தில் அல்லது வளவுகளில் சீட்டாட்ட சூதாட்ட தொழிலை தொழிற்படுத்தும் பொருட்டு 2010 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க, சீட்டாட்ட தொழில் (ஒழுங்குபடுத்தல்) சட்டத்தின் 2 ஆம் பிரிவில் குறிப்பீடு செய்யப்பட்டவாறான உரிமமொன்றுக்காக விண்ணப்பமானது விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

2. இவ் விண்ணப்பப்படிவம் முழுமையாகவும் உண்மையாகவும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது.

3. பிரமுகர் அனைத்து இயைபான சட்ட மற்றும் உரிமத் தேவைப்பாடுகளுடன் இணங்குவார்.

| | கையொப்பமிட்டவர் 1 | கையொப்பமிட்டவர் 2 | கையொப்பமிட்டவர் 3 |
|---|---|---|---|
| முழுப் பெயர் | | | |
| கடவுச்சீட்டு/தே.அ.அ. இலக்கம் | | | |
| வழங்கப்பட்ட திகதி | | | |
| ஒப்பம் | | | |
| திகதி | | | |

EOG 09-0146

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.